1973 நவம்பர் 30]

Rents for Housing Board tenements

* 529 *Q.*—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether there is any difference in the rents collected from the inmates of the buildings under the control of the State Housing Board; and

(*b*) if so, whether the Government propose to fix a uniform standard?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) ஆம்.

(இ) இல்லை.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, is it a fact that recently an order has been passed that in the case of buildings constructed by the Housing Board, if the rent allowance is higher than the rent paid to the house, the rent allowance is either cancelled or the party concerned has to pay the higher rent fixed by the Government?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: வீட்டு வாடகைப்பற்றிய கேள்வி இது. இதிலே அரசு அலுவலாளர்களைப் பொறுத்தவரையில், அவர்களிடத்திலே 10 சத விதம் பிளஸ் ஹவுஸ் ரென்ட் அலவன்ஸ் இரண்டும் சேர்த்துத்தான் வாங்கப்படுகிறது. அதற்கு மேலே வசூலிக்கப்படவில்லையென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், புதிய பே கமிஷனுடைய தீர்ப்பு வருவதற்கு முன்னால், அவர்களுடைய அடிப்படை சம்பளம் குறைவாக இருந்தபோது 10 சதவீதம் வாங்கிக்கொண்டிருந்தார்கள். இப்பொழுது, அக்டோபர் 1970-க்குப் பிறகு, அதே வீட்டிலே, அதே ரூம் இருக்கிறபொழுது, ரூ. 20, ரூ. 30 ஜாஸ்தி கொடுக்கவேண்டிய நிலைமையிலே ஏற்கனவே கொடுக்கப்பட்ட அலவன்ஸ் குறைக்கப்பட்டிருக்கிறதே, ஆகவே, இதை ரேஷனலைஸ் பண்ணுவதற்காக, ஒரே வீட்டிற்கு, சிலரிடம் குறைந்த வாடகையும், சிலரிடம் அதிக வாடகையும் வாங்கப்படுகின்ற நிலையைமாற்றி, அம்மாதிரி உள்ள எல்லா வீடுகளுக்கும் ஒரே வாடகை என்று மாற்றியமைக்க அரசு ஆலோசனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1973 நவம்பர் 30

மாண்புமிகு திரு. க. இராசாராம் : வீட்டினுடைய விலையும் வீடு கட்டுகிற நிலைமையும், காலத்திற்கேற்றவாறு நிலத்தினுடைய விலையும் மாறிமாறி இருந்து வருவதும், தொழிலாளர்களுக்கான கூலி அதிகப்பட்டு வருவதும், வீடுகளிலே அதிகப்படியான வசதிகள் செய்யப்பட்டு வருவதாலும், ஆண்டுக்காண்டு நிலைமைகள் மாறி மாறி வருவதாலும், எல்லா வீடுகளுக்கும் ஒரே மாதிரி நிர்ணயம் செய்வது இயலாத காரியம். இது ஹவுசிங் போர்டு என்ற தனி நிறுவனம் வசூலிக்கிற காரியம். இதிலே அரசு தலையிடுவது கூட அவ்வளவு சரியாக இருக்காது என்று கருதுகிறேன்.

ஊராட்சிகளில் வீட்டுவசதித் திட்டங்கள்.

* 530 வினா—**திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்** : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வீட்டு வசதி இல்லாத டவுன் பஞ்சாயத்துகளில் வீடுகள் கட்டி வாடகைக்கு கொடுக்க அரசாங்கத்திடம் செயல் திட்டம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, (அ) வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக டவுன் பஞ்சாயத்துக்களிலே வீடு கட்டும் திட்டம் செயல்பட்டு வருகிறது.

(இ) இதிலே செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள மேன்மையூரிலும், கோவையிலுள்ள அன்னூரிலும், வேலியம்பாடியிலும், சேலத்திலுள்ள ஆத்தூரிலும் இந்தக் கிராமங்களில் எல்லாம் டவுன் பஞ்சாயத்துகளுடைய வீடுகள் தற்பொழுது கட்டப்பட்டு வருகின்றன.

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : தலைவர் அவர்களே, இதை மற்ற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்துவதற்கு அரசாங்கத்திடம் திட்டம் இருக்கிறதா ? இந்த ஆண்டு இதற்கு ஒதுக்கப்பட்ட பணம் எவ்வளவு என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, பல்வேறு திட்டங்களின் மூலமாக, வீடுகளை கிராமங்களிலே, டவுன் பஞ்சாயத்துக்களிலே கட்டிக்கொள்ளலாம். உதாரணத்திற்கு,